

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 296 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 23 – வெள்ளிக்கிழமை 06 ஜூன் 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 296 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 23 - Friday 06 June 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


## ரூ.175 கோடியில் இராணிப்பேட்டையில் காற்று பிரித்தெடுக்கும் ஆலை! இருங்காட்டுக்கோட்டையில்

# ரூ. 300 கோடியில் ரோபோடிக் பாகங்கள் உற்பத்தி ஆலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜூன் 6-**

**ரூ.300 கோடி முதலீட்டில் 300 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக் கோட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் அஜைல் ரோபோட்ஸ் (Agile Robots) நிறுவனம் அமைத்துள்ள செயற்கை நுண்ணறிவினால் இயக்கப்படும் ரோபோடிக் பாகங்கள் உற்பத்தி ஆலையையும் ரூ.175 கோடி முதலீட்டில், இராணிப்பேட்டை சிப்காட்டில் SOL India Private Limited நிறுவனம் அமைத்துள்ள காற்று பிரித்தெடுக்கும் ஆலையையும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.6.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில், அஜைல் ரோபோட்ஸ் (Agile Robots SE) நிறுவனம், 300 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சி புரம் மாவட்டம், இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் அமைத்துள்ள செயற்கை நுண்ணறிவு சார்ந்த ரோபோட்டிக் இயந்திர பாகங்கள் உற்பத்தி ஆலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்து, பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த 6 மாணவர்களுக்கு உள்ளகப் பயிற்சி (Internship) அளிப்பதற்கான கடிதங்களை வழங்கினார்.

மேலும், இராணிப்பேட்டை சிப்காட்டில் SOL இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், 175 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள காற்று பிரித்தெடுப்பு (Air Separation) ஆலையையும் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

**தமிழ்நாடு அடைந்துள்ள வளர்ச்சி பொருளாதார ஆய்வறிக்கை புகழாரம்!**

தமிழ்நாடு, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாகவும், பல்வேறு துறைகளில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாகவும் விளங்கி வருகிறது. முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதிலும், தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, 2024-25ம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு, 2024-25 ஆம் ஆண்டில் 9.69% பொருளாதார வளர்ச்சியுடன் இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளது. இது, கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்த அதிகபட்ச வளர்ச்சியாகும்.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு, அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கி, தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்குத் தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

**அஜைல் ரோபோட்ஸ் SE நிறுவனம்**

ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த அஜைல் ரோபோட்ஸ் SE நிறுவனம், செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோடிக்ஸ் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, புதிய தலைமுறை தானியங்கு தீர்வுகளை வழங்கும் நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், தற்போது, அனைத்துத் துறைகளுக்கும் பயன்படும் வகையில், செயற்கை நுண்ணறிவு சார்ந்த ரோபோட்டிக் இயந்திர பாகங்கள் உற்பத்தித் தொழிற்சாலையை, காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் நிறுவியுள்ளது. இத்திட்டத்தில், 300 கோடி ரூபாய் முதலீட்டில் 300 உள்ளூர் பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**SOL இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் காற்று பிரித்தெடுக்கும் ஆலை**

SOL இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், இத்தாலி நாட்டைச் சேர்ந்த SOL SpA மற்றும் இந்தியாவின் சிக்ஜில்சால் இந்தியா பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் கூட்டு நிறுவனம் ஆகும். இராணிப்பேட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் அமைந்துள்ள இந்நிறுவனம், தொழிற்சாலைகள் மற்றும் மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி மேற்கொண்டு வருகிறது. 2019 உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, 100 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 2024 உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது 200 கோடி ரூபாய் முதலீடு என்ற வகையில், இந்நிறுவனம், தமிழ்நாடு அரசுடன் காற்று பிரித்தெடுக்கும் திட்டத்திற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளது.

இந்நிறுவனத்தின் காற்று பிரித்தெடுப்பு (Air Separation) ஆலை அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்களால் கடந்த 19.07.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, தற்போது பணி நிறைவடைந்து, 175 கோடி ரூபாய் முதலீட்டில், காற்று பிரித்தெடுக்கும் ஆலை நிறுவப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது உறுதியளித்த முதலீடுகள் இதில் அடங்கும். 20 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு ஆலைகளும் முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் பு.அலர்மேல்மங்கை, அஜைல் ரோபோட்ஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர் ரோரி சாக்ஸ்டன் மற்றும் இந்திய செயல்பாடுகள் மேலாண்மை இயக்குநர் சரவணன் சோலையப்பன், SOL இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் அல்டோ ஃப்புமகல்லி ரொமாரியோ, திட்டத் தலைவர் கைலியோ லாவ் ஃப்புமகல்லி ரொமாரியோ, SOL இந்தியா நிறுவனத்தின் இயக்குநர் எஸ்.வி. வெங்கடேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.6.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில், அஜைல் ரோபோட்ஸ் (Agile Robots SE) நிறுவனம், 300 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் அமைத்துள்ள செயற்கை நுண்ணறிவு சார்ந்த ரோபோட்டிக் இயந்திர பாகங்கள் உற்பத்தி ஆலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் பு.அலர்மேல்மங்கை, அஜைல் ரோபோட்ஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர் ரோரி சாக்ஸ்டன் மற்றும் இந்திய செயல்பாடுகள் மேலாண்மை இயக்குநர் சரவணன் சோலையப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஸ்பெயின் மண்ணில் இந்திய நாட்டுக்கான குரலாகத் தமிழ்நாட்டின் அன்புமொழியை –

# ஒற்றுமை மொழியைப் பேசிய தங்கை கனிமொழி! பெருமை கொள்கிறேன்!

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு – வாழ்த்து!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.6.2025) முகாம் அலுவலகத்தில், ஜம்மு–காஷ்மீர் மாநிலம், பஹல்காம் பகுதியில் தீவிரவாத தாக்குதலால் இந்தியா – பாகிஸ்தான் இடையே ஏற்பட்ட போர் குறித்து இந்தியாவின் நிலைப்பாட்டை உலகிற்கு விளக்கிட ரஷ்யா, ஸ்லோவேனியா, லாட்பியா, கீரிஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட ஒன்றிய அரசின் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள், தனது பயணத்தை முடித்து தாயகம் திரும்பியதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

சென்னை, ஜூன் 6-

பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ம் தேதி நடந்த தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து, இந்தியா மேற்கொண்ட 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையும், இந்தியா - பாகிஸ்தான் இடையிலான மோதலும் குறித்து சர்வதேச நாடுகளுக்கு தெளிவாக விளக்குவதற்காக, அனைத்துக் கட்சி எம்.பி.க்களை உள்ளடக்கிய 7 குழுக்கள் ஒன்றிய அரசினால் உருவாக்கப்பட்டன.

பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் உறுதியான மற்றும் சகிப்புத்தன்மை இல்லாத நிலைப்பாடு, போன்ற விஷயங்களை நாட்டின் ஒருமித்த கருத்தாக எடுத்துரைக்க கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையிலான குழு பயணம் மேற்கொண்டது.

குறிப்பாக நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி எம்.பி., தலைமையிலான குழு, ரஷ்யா, ஸ்பெயின், ஸ்லோவேனியா, கிரீஸ், லாட்வியா ஆகிய நாடுகளுக்குச் சென்று விளக்கம் அளித்ததையடுத்து கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையிலான இக்குழு தனது அடுத்த பயணமாக கடந்த 1ஆம் தேதி அன்று ஸ்பெயின் சென்றது. ஸ்பெயின் தலைநகர் மேட்ரிட்டில் ஸ்பெயினுக்கான இந்திய தூதர் தினேஷ் கே.பட்நாயக் இக்குழுவை வரவேற்றார். ஸ்பெயின் அரசு உயர்மட்ட அதிகாரிகருடன் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையிலான இக்குழு சந்தித்து சிந்தூர் நடவடிக்கை குறித்து விரிவாக எடுத்து உரைத்தனர். இந்திய வம்சாவளியினரையும் சந்தித்து கனிமொழி கருணாநிதி உரையாடினார்.

அதுபோது இந்தியாவின் தேசிய மொழி எது என கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த கனிமொழி கருணாநிதி எம்.பி., **வேற்றுமையில் ஒற்றுமை என்பதே இந்தியாவின் தேசிய மொழி, இந்தக் குழு உலகிற்குக் கொண்டு வரும் செய்தியும் இதுதான்** என்றார்.

இந்த பதிலுக்கு அரங்கத்தில் இருந்தவர்கள் அனைவரும் கரவொலி எழுப்பி கனிமொழி கருணாநிதியின் பதிலை வரவேற்றனர். இந்தக் கருத்து சமூக வலைதளங்களில் ஊடகங்களில் வெகுவாக வலம் வந்து மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது.

இதனையடுத்து கனிமொழி கருணாநிதி 3.06.2025 அன்று சென்னை திரும்பினார். சென்னை திரும்பிய கனிமொழி கருணாநிதி நேற்று முன்தினம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!**

இந்நிலையில் ஸ்பெயினில் கனிமொழி கருணாநிதியின் வேற்றுமையில் ஒற்றுமையே இந்திய தேசிய மொழி - என்று பேசிய வீடியோவினை இணைத்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் பதிவிட்டுள்ளார் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களை பாராட்டியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஸ்பெயின் மண்ணில், "இந்தியாவின் தேசிய மொழி #UnityInDiversity" என உரக்கச்சொல்லி, மக்களின் உணர்வுகளைக் கைத்தட்டல்களாகவும் உங்களால் அதிகம் பகிரப்படும் காணொளியாகவும் மாற்றிய தங்கை கனிமொழி எம்.பி. அவர்களை வாழ்த்தினேன்!**

**இந்திய நாட்டுக்கான குரலாகத் தமிழ்நாட்டின் அன்புமொழியை ஒற்றுமைமொழியைப் பேசிய தங்கை கனிமொழியைக் கண்டு பெருமை கொள்கிறேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் பாராட்டி பதிவிட்டுள்ளார்.